தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, பங்குனி 13, திருவள்ளுவர் ஆண்டு-2046

2015 மார்ச் 27, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *"இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லார்க்குத் தன்சொலால்*
> *தான்கண் டனைத்துஇவ் வுலகு"*

எளிய மக்களிடம் இனிமையாகப் பேசி தேவையானதைக் கொடுத்து, உதவி செய்யும் ஆட்சியாளருக்கு, புகழ் தானாக வந்து சேரும். அவர் விருப்பம்போல் குடிமக்களும் அமைவார்கள்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கோ. இளங்கோவன் அவர்கள் 7-3-2015 அன்றும், திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் 15-3-2015 அன்றும் மற்றும் திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் 23-3-2015 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கோ. இளங்கோவன் அவர்கள் 1971 முதல் 1976 வரையிலும் மற்றும் 1977 முதல் 1980 வரையிலும் இரண்டு முறை திருவையாறு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் அவர்கள் 1977 முதல் 1980 வரை சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

[பேரவைத் தலைவர்] [2015 மார்ச் 27

திரு. அ.மா. பரமசிவன் அவர்கள் 1977 முதல் 1980 வரை மேலூர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1991 முதல் 1996 வரை சோழவந்தான் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1993 முதல் 1996 வரை அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

துணை மின் நிலையம்

***6858—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்கரி வட்டம், தேவூர் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?